**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - 2017**

---

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. மேலும் பல்கலைக்கழகங்கள் அதிகாரசட்டகத்தின் 108(II) ஆம் உப பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று பல்கலைக்கழக உப வேந்தருக்கு 17 செப்தம்பர் 2018 இல் வழங்கப்பட்டுள்ளது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கட்டட உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 225,000 வாடகை தொகையானது வாடகைகணக்குக்கு வரவு வைப்பதற்கு பதிலாக வாடகை வைப்பு கணக்குக்கு தவறுதலாக சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான செலவும், 31 திசெம்பர் 2017 ல் உள்ளவாறான வாடகை வைப்பு கணக்கும் குறித்த தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) சுய நிதியிடல் கற்கை நெறிகள் வருமான கணக்கில் 2013 ம் ஆண்டிலிருந்து ரூபா 184,853 வரவு மீதி காணப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் மீளாய்வாண்டின் இறுதிவரை இக் மீதியை இல்லாதொழிக்க எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 இலிருந்து 2017 வரையான காலப்பகுதியில் முடிவுறுத்தப்பட்ட ரூபா 22,245,263 பெறுமதியான மின்சார வழங்கல் வேலைகள் கணக்குக்கு கொண்டுவரப்படாதிருந்தது. இதனால் அவற்றின் மீதான ரூபா 1,700,000 தொகையான பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டியகணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டு மொத்தம் ரூபா 629,750 ஆன பத்து மீளளிக்கத்தக்க வைப்புக்கள் எட்டு வருடங்களுக்கு மேலாக இக் கணக்கை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

(ஆ) ரூபா 534,808 கூட்டு மொத்தமான ஐந்து செலுத்தவேண்டியவைகள் 30 செப்ரம்பர் 2018 வரை தீர்ப்பனவு செய்வதற்கு எவ்வித பயனுறுதிதன்மையான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் எட்டு வருடங்களுக்கு மேலாக சில்லறை கடனாளிகளின் கீழ் காணப்படுகின்றது.

(இ) அலுவலர் கடன் மீதி நிலுவைகள் ரூபா 948,005 ஆன கூட்டு மொத்த தொகை மீதி அறவிடப்படாமல் 05 ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்படுகின்றது.

(ஈ) பல்வேறு நோக்கங்களுக்காக 05 தரப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட ரூபா 443,485 ஆன கூட்டு மொத்தமான முற்பணங்கள் 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்காய்வுச் சான்றின்மை

ரூபா 58,562,916 பெறுமதியான நூலக புத்தகங்கள் தொடர்பிலான வருடாந்த மெய்மையாய்வு சபை அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 விதிகள், ஒழுங்கு விதிகள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

அவதானிக்கப்பட்ட இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | விதிகள், ஒழுங்கு விதிகள், மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்காமைகள் |
|---|---|---|
| (i) | 2009 சித்திரை 16 ம் திகதிய 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | விவசாயபீடம், விஞ்ஞானபீடம், இராமநாதன் நுன்கலை கல்லூரி, வனிக முகாமைத்துவபீடம் மற்றும் சித்த மருத்துவ அலகு என்பவற்றில் பொருத்தப்பட்டிருந்த 5 விரல் அடையாள பதிவு இயந்திரங்கள் கடந்த 02 ஆண்டுகளுக்கு மேலாக செயலிழந்திருந்தது. சகல அலுவலர்களும் தமது வருகை மற்றும் வெளிச்செல்லுகையை விரலடையாள பதிவு இயந்திரத்தில் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய போதிலும் அவ் இயந்திரங்களை திருத்துவதற்கு முகாமைத்துவம் எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. |
| (ii) | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 2013 ஏப்ரல் 10 ஆம் திகதிய 04/2013 ஆம் இலக்க தாபன சுற்றறிக்கை. | மீளாய்வாண்டிற்கான ஆண்டு கணிப்பீட்டுச் சபையை நடாத்தி முடிப்பதில் 06 மாத கால தாமதம் அவதானிக்கப்பட்டது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 197,158,693 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 443,649,262 ஆன பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 246,490,569 ஆன மேலுமொரு பின்னடைவினை சுட்டிக்காட்டுகின்றது. இந்த பின்னடைவுக்குப் பிரதான காரணங்களாக ஆளணி வேதனங்கள், ஒப்பந்த சேவைகள் மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினங்களின் அதிகரிப்பு என்பன இருந்தன.

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் தொழிற்பாடுகள் ரூபா 443,649,262 பற்றாக்குறையை விளைவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்கள், அரசாங்கத்திற்கு செலுத்திய வரிகள் மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 2,342,036,986 என்பன அதிகரித்தமையால் மீளாய்வாண்டிற்கான பெறுமதிச் சேர்க்கை ரூபா 1,898,387,724 ஆக இருந்ததுடன் முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா 52,035,162 அல்லது 3 சதவீதத்தால் முன்னேறியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கல்விசார் செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் கல்விசார் செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.

**(அ) பரீட்சைப் பெறுபேறுகள்**

1995 யூலை 14 இன் 636 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம், பரீட்சை நடைபெற்ற பின்னர் மூன்று மாதங்களிற்குள் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு பீடங்களின் கீழ் நடாத்தப்பட்ட பல்வேறு பாடநெறிகளிற்கான பரீட்சைகள் நடைபெறுவதற்கான திகதிகள் மற்றும் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதற்கான இலக்கிடப்பட்ட திகதிகள் என்பன நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கலைகள், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக, விஞ்ஞான பீடங்கள், ஏஎச்எஸ் அலகு, மருத்துவ விஞ்ஞான கூட ஏஎச்எஸ் அலகு, தாதிய ஏஎச்எஸ் அலகு, மருந்தக ஏஎச்எஸ் அலகு மற்றும் பல்கலைக்கழக பட்டபின் கல்வி திப்ளோமா அலகு என்பவற்றால் பரீட்சைப் பெறுபேறுகளை விடுவிப்பதில் 04 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரையிலான வீச்சில் கருத்திற்கொள்ளக்கூடிய காலதாமதங்கள் இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. ஆதலால், மாணவர்கள் உரிய நேரத்தில் அவர்களுடைய வேலைவாய்பிற்கான சந்தர்ப்பங்களை பெறுவதற்கு முடியாதிருந்தது. இந்த விடயம் என்னுடைய முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு உரிய அதிகாரிகளால் அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) நூலக நிர்வாகம்**

கடந்த காலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட யூஎஸ்டி 951,597 பெறுமதியான பருவகால வெளியீடுகள் 2018 அக்டோபர் 05 வரை பல்கலைக்கழகத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) மாணவர் கல்வி நிகழ்ச்சித்திட்டம்**

விவசாயபீடத்தின் கல்விசார் ஆளணியினரால் மீளாய்வாண்டின் போது 1847 மணித்தியாலங்களில் விரிவுரை மற்றும் செயன்முறை அமர்வுகளின் 491 விரிவுரை மணித்தியாலங்கள் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ). பல்கலைக்கழக தரவரிசை**

2017ம் ஆண்டில் வெபோமெற்றிக்ஸ் வெளியீடு செய்த உலக தரப்படுத்தலில் பல்கலைக்கழகமானது இலங்கை பல்கலைக்கழகம் மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கிடையில் முறையே 7ம் மற்றும் 4506 ஆம் தரவரிசையை பெற்றிருந்தது. அதே நேரத்தில் முன்னைய ஆண்டில் 8 ஆம் மற்றும் 5380 ஆம் இடங்களை தக்கவைத்திருந்தது. எப்படியாயினும் உள்ளூர் மற்றும் சர்வதேசத்தில் பல்கலைக்கழகத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கான மேலதிக நடவடிக்கைகள் வேண்டப்படுகின்றது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளிநாடுகளுக்கு புலமைப்பரிசில் பெற்றுச் சென்ற பல்கலைக்கழகத்தின் 73 விரிவுரையாளர்கள் புலமைப்பரிசில் நிறைவடைந்த பின்னர் மீள திரும்பியோ அல்லது கடமைக்கு அறிக்கையிட்டோ இருக்கவில்லை. எவ்வாறாயினும் பல்கலைக்கழகமானது உடன்படிக்கை மீறிய 31 திசெம்பர் 2017 ல் இருந்தவாறான கூட்டு மொத்தம் ரூபா 68.4 மில்லியன் பிணையை அறவிடுவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகமானது மாணவர்களுக்கான தொடர்புடைய ஞாபகார்த்த புலமைப்பரிசில் நிதியை செலுத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள தவறியிருந்தது. இதன் விளைவாக ரூபா191,760 தொகையான ஞாபகார்த்த புலமைப்பரிசில் பணம் 2017 ஆம் ஆண்டில் 116 மாணவர்களுக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மெய்மையாய்வு அறிக்கையில் பயன்பாடற்ற 5890 உருப்படிகள் மற்றும் பயன்படுத்த முடியாத 6080 உருப்படிகள் தொடர்பில் பொருட்கள் மெய்மையாய்வுக்கு நியமிக்கப்பட்ட குழுவினரால் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2016 ம் ஆண்டுக்கான மெய்மையாய்வு சபை அறிக்கையில் அறிக்கையிடப்பட்ட 3118 பழுதடைந்த உருப்படிகள் மற்றும் 8388 பயன்படுத்த முடியாத உருப்படிகள் தொடர்பில் பல்கலைக்கழக முகாமைத்துவத்தால் பொருத்தமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 பயன்பாடற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.**

(அ) பல்கலைக்கழகத்தின் I ஆம் மற்றம் II ஆம் களஞ்சியங்களில் ரூபா 1,219,402 பெறுமதியான பயன்பாடற்ற குறைபயன்பாடுடைய மற்றும் மெதுவாக நகரும் உருப்படிகள் 03 தொடக்கம் 19 வருடங்களாக காணப்பட்டிருந்தது.எவ்வாறெனினும் இது தொடர்பில் பல்கலைக்கழகத்தினால் உடனடியான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடத்திடம் ரூபா 192.36 மில்லியன் பெறுமதியான கட்டடம் கட்டப்பட்டு முடிவுறுத்தி கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 03 ஆண்டுகளுக்கு மேலாக இக் கட்டடம் பயன்பாடற்றிருக்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைதல்

2030 ஆம் ஆண்டிற்கான குறிப்பிட்ட நிகழ்ச்சி நிரல் பல்கலைக்கழகத்தினால் அறியப்படாததால் அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதில் உள்ள மைல்கல்லை ஒன்று சேர்ந்த செயற்பாடுகளுடன் பல்கலைக்கழகத்தின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6. நல்லாளுகையும் கணக்களி பொறுப்பும்

### 6.1 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கட்டடங்கள் திணைக்களத்திற்கு பல்வேறு கட்டுமாணங்கள் மற்றும் புனரமைப்பு வேலைகளுக்காக 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 வரையான காலப்பகுதிகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 29,611,788 கூட்டு மொத்தமான முற்பணங்கள் வேலைகள் முடிவடைந்த பின்னரும் 02 வருடங்களுக்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டடங்கள் திணைக்களத்திற்கு 2017 ஏப்பிரலில் வவுனியா வளாகத்தில் அலுவலர் விடுதிகள் கட்டுவதற்காக ரூபா 25 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தத்தின்படி வேலையானது 2017 திசெம்பர் 31 க்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறெனினும் 2018 செப்ரெம்பர் 30 வரை வேலையானது முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உண்மை வருமானங்கள் செலவினங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டது. இது பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டில் பயனுறுதியான கருவியாக பயன்படுத்தப்பட்டிராமையை எடுத்துக்காட்டுகின்றது.

### 6.3 ஆண்டறிக்கையை அட்டவணைப்படுத்தல்

2003 யூன் 02 ம் திகதிய பிஎடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிரூபம் பிரிவு 6.5.3 இன் படி 2018 யூலை 31 ம் திகதி வரை 2016 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் அட்டவணைப்படுத்தப்படவில்லை.

### 6.4 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டும் தீர்வு செய்யப்படாத விடயங்கள்

(அ) எல்லா அலுவலர்களும் தமது வருகை மற்றும் வெளிச்செல்லுகையை கட்டாயமாக விரலடையாளமாக பதிவு இயந்திரத்தில் கட்டாயமாக பதிவு செய்ய வேண்டிய போதிலும் பல அலுவலர்கள் தமது வரவு மற்றும் வெளிச் செல்லுகையை விரலடையாள பதிவு இயந்திரத்தில் பதிய தவறியதுடன் இது தொடர்பாக 2017 நவம்பர் 23 ஆம் திகதிய பொது முயற்சிகள் குழுவில் பல்கலைக்கழகத்தில் இணைக்கப்பட்ட சகல அலுவல்களும் விதிகள், ஒழுங்குகள் மற்றும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தர் வழங்கும் வழிகாட்டல்களையும் பின்பற்ற வேண்டும் என பணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இவ் அறிக்கைத் திகதி வரை பல்கலைக்கழகத்தினால் இது தொடர்பிலான வழிகாட்டல்கள் உள்வாங்கப்படவில்லை.

(ஆ) கடந்த ஆண்டு கணக்காய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 357,400 பெறுமதியான நட்டங்கள் தொடர்பாக நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 வரை எடுக்கப்படவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக்காலம் பல்கலைக்கழக உப வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு விடய பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதி | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | சொத்து முகாமைத்துவம் | சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மனிதவள முகாமைத்துவம் | கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியில் உள்ள வெற்றிடங்கள் நிரப்ப உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் அல்லது உள்ளபடியான பதவியணியை உண்மையான மனிதவள தேவைக்கமைய மாற்றியமைக்க வேண்டும். |
| (இ) | வாகன ஓட்ட முகாமைத்துவம் | பயண நோக்கம், எரிபொருள் கட்டளை இலக்கம், எரிபொருள் பற்றுச்சீட்டு இலக்கம் திகதி என்பன வாகன ஓட்ட அறிக்கையில் குறிப்பிடப்படல் வேண்டும். |
| (ஈ) | கணக்கீடு | காசுப்பாய்ச்சல் கூற்றை தயாரிக்கும் போது உரிய மாதிரி பயன்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | களஞ்சிய நிர்வாகம் | களஞ்சிய பொருட்களை முறையாக பயன்படுத்துவதற்கு அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. |